# 6 கடைகளுக்கு கம்பாவுண்ட்

# டிபிகேஎல் நடவடிக்கை

கோலாலம்பூர், ஆக. 2-

சுங்கை பீசி ஜாலான் சுவாசா 3, 5 பகுதிகளில் பொது வழித்தடத்திற்குத் தடையாக இருந்ததாகக் கண்டறியப்பட்ட 6 வர்த்தகத் தளங்களுக்குக் கோலாலம்பூர் மாநகர் மன்றம் (டிபிகேஎல்) கம்பாவுண்ட் வழங்கியது.

பண்டார் துன் ரசாக் கிளை டிபிகேஎல் அலுவலகம், அமலாக்கப் பிரிவினர் இந்த அதிரடிச் சோதனையை மேற்கொண்டனர். கண்காணிப்பு, ரோந்துப் பணிகள் வாயிலாக பொது வழித் தடத்தில் மேஜை, நாற்காலிகள் போன்ற பொருட்களை அடுக்கி வைத்திருந்த கடை முதலாளிகளுக்கு இந்தக் கம்பாவுண்டுகள் வழங்கப்பட்டன.1974 சாலை, கட்டடச் சட்டம் பிரிவு 46 (1) (டி) கீழ் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது என கோலாலம்பூர் மாநகர் மன்றத் தரப்பு தனது அறிக்கையில் கூறியுள்ளது.

IN